توحيد الربوبية

# தவ்ஹீத் அர் ருபூபிய்யா

ஆசிரியர்:
**கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்**

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர்,

ம:.ஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.

WWW.MAHADSUNNAH.COM

www.alsarhaan.com

# தவ்ஹீத் அர் ருபூபிய்யா

அடியார்கள் அல்லாஹ்வுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமை எது?
அல்லாஹ்வுக்கு நாம் நிறைவேற்ற வேண்டிய கடமையை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்று சிந்திக்கின்றீர்களா?

ஆம்! உண்மையில் அல்லாஹ்வுக்கு நாம் நிறைவேற்ற வேண்டிய கடமை:

**"அவனை ஒருமைப்படுத்தி அவனுக்கு எதையும் இணை வைக்காதிருப்பது".**

அதாவது, தவ்ஹீத் -ஏகத்துவம்- மூன்று வகைப்படும்:

01. தவ்ஹீத் அர் ருபூபிய்யா
02. தவ்ஹீத் அல் உலூஹிய்யா
03. தவ்ஹீதுல் அஸ்மாஃ, வஸ்ஸிபாத் (அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் பற்றியது)

தவ்ஹீத் அர் ருபூபிய்யா என்றால் ; அல்லாஹ்வை அவனுக்குரிய செயல்களில் அவனே தனித்தவன் என நம்பி ஒருமைப்படுத்தல். எனவே, அல்லாஹ்வே தனித்து நின்று படைப்பவனும், உணவளிப்பவனும் , நிர்வகிப்பவனும் என்று உறுதியாக நம்பவேண்டும்.

அத்துடன், அவனே ஆட்சி அதிகாரத்தையும்

உயிர்ப்பித்தல், மரணிக்கச் செய்தல் ஆகியவற்றையும் தன்வசம் வைத்துள்ளான் எனவும், நன்மை, தீமை இரண்டும் அவன் நாட்டப் பிரகாரமே நடைபெறுகிறது எனவும் , இக்கட்டான வேளையில் பிரார்த்தனையை ஏற்று அங்கீகரிப்பவன் அவனே என்றும் உறுதியாக நம்பவேண்டும் .

எண்ணற்ற பாக்கியங்களை அடியார்கள் அனைவர்களுக்கும் வழங்குபவன் அவன் . குறிப்பாக விசுவாசிகளுக்கு ஹிதாயத் எனும் நேர் வழியை வழங்குபவன்.

அவனே யாவற்றின் படைப்பாளனும், இரட்சகனும், அவற்றின் மேல் ஆற்றல் உள்ளவனும். அவனது ருபூபிய்யத் (அதிகாரத்) திலிருந்து எதுவும் விலகிச் செல்ல முடியாது. வானம் பூமியில் உள்ள யாவரும் அவனது கட்டுப்பாட்டிலுள்ள அவன் அடியார்களே.

நபிகள் வந்துதித்த மக்கா இணைவைப்பாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் இவ்வகை தவ்ஹீதை (தவ்ஹீத் அர் ருபூபிய்யா) வை ஏற்றிருந்தும் அல்லாஹ் அவர்களின் வணக்கங்களை ஏற்கவில்லை. ஏனெனில் அவர்கள் இரண்டாம், மூன்றாம் வகை தவ்ஹீதை ஏற்றிருக்கவில்லை.

திருமறையில் அல்லாஹ் இது பற்றி பின்வருமாறு விபரிக்கிறான்.

(நபியே! அவர்களை நோக்கி) கூறுவீராக: “வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு யார் உணவளிக்கிறான்? அல்லது, (உங்கள்) செவிக்கும் பார்வைகளுக்கும் யார் உரிமை கொள்வான்? இன்னும், இறந்ததிலிருந்து உயிருள்ளதையும்; உயிருள்ளதிலிருந்து இறந்ததையும் யார் உற்பத்தி செய்கிறான்? இன்னும், எல்லா காரியங்களையும் யார் திட்டமிட்டு நிர்வகிக்கிறான்?” ஆக, (அதற்கு பதிலில்), “அல்லாஹ்தான்” என்று கூறுவார்கள். ஆக, நீர் கூறுவீராக: “ஆகவே, நீங்கள் அந்த அல்லாஹ்வை அஞ்சவேண்டாமா?” (10:31)